## 2. ஓர் எழுத்துருவை தலைப்புகளுடனும் பந்திகளுடனும் கட்டமைத்தல்

3 - 9 ஆந் தரம்

30 மணித்துளிகள்

கருவிகள்:
முன்னேற்பாட்டு எழுத்துருக்கள் (வலம் பார்க்கவும்)

**மாற்றுகள்:**

- ஆசிரியர் இரு எழுத்துருக்களை தயார்ப்படுத்தி அவை ஒளிப்பிரதிகளாக்கப்படுகின்றன. (ஒவ்வொன்றும் A4 அளவு): எழுத்துரு அ தலைப்பும் துணைத்தலைப்பும் இல்லாதது, பந்திகளும் இல்லை (அல்லது அரிதாக ஏதாவது). எழுத்துரு ஆ (எ-டு. ஒரு நாடு அல்லது ஒரு விலங்கு பற்றிய உண்மையான எழுத்துரு) தெளிவான தலைப்பு, பந்திகள், துணைத் தலைப்புகளுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது.
  கலந்துரையாடல்: ஏன் எழுத்துரு ஆ படிப்பதற்கு எளிதாயுள்ளது? துணைத்தலைப்பு பந்திகளின் தேவை என்ன? இதனை இன்னும் எப்படி மேம்படுத்தலாம்? (எ-டு.விளக்கப்படங்களுடன்)




  ஆசிரியர் படக்கதை (4 – 5 படங்கள்) ஒன்றினைப் பகிர்கிறார். செயற்பாடு: இணையராக, மாணவர்கள் முழுக் கதைக்குமான கவர்ச்சியான தலைப்புடன் ஒவ்வொரு படத்துக்குமான துணைத்தலைப்பினையும் கண்டுபிடிக்கவேண்டும்.

- ஆசிரியர் எழுந்தமானமாக பந்திகளோ தலைப்புகளோ இல்லாத ஓர் எழுத்துருவினை (ஆகக்கூடியது: 2/3 பக்கம்) பகிர்கிறார். செயற்பாடு: எழுத்துருவுக்கு ஒரு தலைப்பினைக் கண்டுபிடித்தல், அதனைப் பந்திகளாக ஒழுங்குசெய்தலும் துணைத் தலைப்புகளை உருவாக்கலும்!

- கீற்றுகளாக வெட்டப்பட்ட ஒரு கதையினை (ஒவ்வொரு கீற்றுத் தாளிலும் ஒரு பந்தியாக) ஆசிரியர் பகிர்கிறார். செயற்பாடு: சரியான தொடர்வரிசையை அறிந்து கதை வளர்ச்சியினை சரியான ஒழுங்கில் இட்டு, துணைத் தலைப்புகளை முடிவுசெய்யவும். பின்னர் கீற்றுகளை ஒரு தாள் துண்டிலே ஒட்டி அதில் தலைப்புகளையும் துணைத்தலைப்புகளையும் எழுதுக!

- ஆசிரியர் வகுப்புக்கு ஒரு தலைப்பை வழங்குகிறார், எ-டு. "எங்கள் தலைநகரம் பற்றி ஓர் எடுத்துரைப்பு", "எங்கள் பண்பாட்டின் இன்றியமையாத ஓர் ஆளுமையாளர்" அல்லது "இரு பண்பாடுகளில் என் வாழ்வு". செயற்பாடு: ஓர் எழுத்துரு எழுதவேண்டுமாயின், அல்லது தலைப்புகளுள் ஒன்று பற்றி எடுத்துரைப்பு வழங்குவதாயின், எத்தகைய தலைப்பினையும் துணைத்தலைப்புகளையும் தேர்ந்தெடுப்பீர்?

- செயற்பாடு (முந்தைய கருத்துரையுடன் தொடர்புற்றதாக) எழுத்துரு ஒன்று எழுதுக, நான்கு பந்திகளுடனும் பொருத்தமான துணைத்தலைப்புகளுடனும் அதனைக் கட்டமைக்குக!

II